

திருவண்ணாமலை நகர தி.மு.க. சார்பில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, 2000க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நலஉதவிகள் வழங்கினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, எ.வ. குமரன், டாக்டர் ஏ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி.எம்.எல்.ஏ.,பெ.சு.தி.சரவணன்.எம்.எல்.ஏ., ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், க.சௌந்தரராசன், சு.ராஜாங்கம் உட்பட பலர் உள்ளனர்.



விழுப்புரம் மந்தக்கரையில் முகமது இப்ராஹிம் தலைமையில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாவட்ட செயலாளர் அமீர் அப்பாஸ் முன்னிலையில் நடைபெற்ற இப்தார் நோன்பு நிகழ்ச்சியை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார். அமைச்சர் சி.வெ.கணேசன், மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., சபா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ., மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், செ.புஷ்பராஜ் , குலாம் மொய்தீன், தயா இளந்திரையன், இரா சக்கரை, பஞ்சநாதன், தமிழ்ச்செல்வி பிரபு, சித்திக் அலி, அப்துல் ரகுமான், முஸ்தாத்தீன், அப்துல் ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நீதித்துறைக்குத் தேவையான வசதிகளை திராவிட மாடல் அரசு நிறைவேற்றித் தருகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தியாவில் வெவ்வேறு மதம், இனம் மற்றும் பண்பாட்டு நடைமுறைகள் இருந்தாலும், நம்முடைய அரசமைப்புச் சட்டம், அதன் மாற்றும் அணுகுமுறையின் காரணமாக உயிர்ப்புடன் இருக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தின் மீதான எந்தவொரு தாக்குதலுக்கும் எதிராக உறுதியான தூண்களாக நிற்கும் சுதந்திரமான நீதித்துறை, சிறந்த நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களுடைய பங்களிப்பு ஆகியவை அரசமைப்பின் உயிர்ப்பான நிலைத் தன்மைக்குக் காரணம் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

**அண்மைக் காலமாக கூட்டாட்சித் தத்துவம் பாதிக்கப்படும் நிலை!**

அண்மைக் காலங்களில், அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளில் ஒன்றான கூட்டாட்சித் தத்துவம் பாதிக்கப்படுகின்ற நிலை காணப்படுகிறது.

நிதி, கல்வி போன்ற பல விஷயங்களில், மாநில அரசுகளின் சுயசார்புத் தன்மை உறுதி செய்யப்பட வேண்டும் என்று கருதுகிறேன்.

அரசமைப்புச் சட்டத்தின் ஆளுமையை உறுதி செய்வதில், மாநிலங்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதில் நீதித்துறை தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கிறது.

கற்றறிந்த நீதியரசர்களும், வழக்கறிஞர்களும், இந்த அவையும் அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாவலர்களாக செயல்படுகிறார்கள்.

நம்முடைய அரசு, அரசியல் சாசனத்தின் வார்த்தைகளை முழுமையாக நடைமுறைப் படுத்த, கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

**நீதித்துறைக்கு இந்த அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள்!**

இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல், நீதித் துறைக்கும், வழக்குரைஞர்களின் நலனுக்கும், சட்டக்கல்விக்கும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதில் சிலவற்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாடு வழக்கறிஞர் நல நிதியத்திற்கு ஆண்டுதோறும் அரசு வழங்கும் 8 கோடி ரூபாய் மானியத்தை 10 கோடி ரூபாயாக உயர்த்தி வழங்கி இருக்கிறோம்.

இயற்கை எய்திய வழக்குரைஞர்களின் சட்டபூர்வ வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை 7 லட்சம் ரூபாயிலிருந்து 10 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டது.

உயிரிழந்த வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிதியுதவிக்கான விண்ணப்பங்கள் அப்போது அதிகமாக நிலுவையில் இருந்ததை கருத்தில் கொண்டு, கூடுதல் மானியமாக

20 கோடி ரூபாய் வழக்குரைஞர்கள் நல நிதியத்துக்கு வழங்க ஆணையிடப்பட்டது. கூடுதலாக 2 கோடி ரூபாய் நிதி வழங்கியிருக்கிறோம்.

**நீதித்துறைக்கு உட்கட்டமைப்பு வசதிகளை செய்து தரும் அரசு!**

நீதித்துறைக்கான உட்கட்டமைப்பு வசதிகளைப் பொறுத்தவரைக்கும், நம்முடைய அரசு பொறுப்பேற்றதில் இருந்து,

6 மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள்;

5 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள்;

13 சார்பு நீதிமன்றங்கள்;

2 கூடுதல் சார்பு நீதிமன்றங்கள்;

7 முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்;

18 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்;

3 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்;

1குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்;

7 வணிக நீதிமன்றங்கள்;

9 சிறப்பு நீதிமன்றங்கள்;

2 குடும்பநல நீதிமன்றங்கள் உள்ளிட்ட 73 புதிய நீதிமன்றங்கள்; 1689 புதிய பணியிடங்கள் மற்றும் இதர வசதிகளுடன் 151 கோடியே 68 இலட்சத்து 47 ஆயிரத்து 995 ரூபாய் செலவில் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கிறது.

புதிதாக நீதிமன்ற கட்டடங்கள் கட்டுதல், நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டடங்கள் கட்டுதல், பழைய நீதிமன்ற கட்டடங்களை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணி களுக்கு அரசு 851 கோடியே 43 இலட்சம் ரூபாய் வழங்கி இருக்கிறது.

**மாவட்ட கீழமை நீதிமன்றங்களுக்கு அரசு நிறைவேற்றித் தரும் வசதிகள்!**

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை கிளை ஆகிய நீதிமன்றங்களுக்கு கணினி தொடர்பான கட்டமைப்புகளை உருவாக்க

37 கோடியே 94 இலட்சம் ரூபாய் அரசு வழங்கியிருக்கிறது.

மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களுக்கு, கணினி தொடர்பான கட்டமைப்புகளை உருவாக்க 66 கோடியே 66 இலட்சம் ரூபாய் அரசு வழங்கியிருக்கிறது.

சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளைக்கு பல்வேறு நிலையிலான 20 கூடுதல் பணியிடங்களை உருவாக்கி ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கிறது.

மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களுக்கு, பல்வேறு நிலையிலான 244 கூடுதல் பணியிடங்களை உருவாக்கி ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கிறது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில், சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரிக்கு விடுதிகளுடன் கூடிய கட்டடம் கட்டுவதற்கு 100 கோடியே 45 இலட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

நாமக்கல் அரசு சட்டக் கல்லூரிக்கு, விடுதிகளுடன் கூடிய கட்டடம் கட்டுவதற்கு 102 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மதுரை அரசு சட்டக் கல்லூரிக்கு, புதிய கட்டடம் கட்டும் பணிகளுக்கு ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்ட 40 கோடியே 8 இலட்சம் ரூபாயுடன் கூடுதலாக 4 கோடியே 61 இலட்சம் ரூபாய் வழங்கி கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**அரசு சட்டக் கல்லூரிகளுக்கு தேவையான திட்டங்கள்!**

6 அரசு சட்டக் கல்லூரிகளுக்கு, 480 மாணவர்களை கூடுதலாக அனுமதித்து, ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 12 நபர்கள் அரசு சட்டக் கல்லூரிகளில் விளையாட்டு மற்றும் உடற்கல்வி இயக்குநர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமன முறையில் தெரிவு செய்யப்பட்ட 12 உதவிப் பேராசிரியர்கள், அரசு சட்டக் கல்லூரிகளில் தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள்.

அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரிந்து வரும் 36 உதவிப் பேராசிரியர்களுக்கும், அதில் 5 உதவிப் பேராசிரியர்களுக்கும் இணைப் பேராசிரியர் நிலைக்கு பணி மேம்பாடு வழங்கப்பட்டிருக்கிறது.

அரசு சட்டக்கல்லூரிகளில், காலியாக இருக்கின்ற 2 பழங்குடியினர் பிரிவினருக் கான பின்னடைவு காலி பணியிடங்கள், 8 இணைப் பேராசிரியர்கள், 64 சட்ட உதவிப் பேராசிரியர்கள் மற்றும் 60 சட்ட முன்படிப்பு உதவிப் பேராசிரியர்கள் என்று மொத்தம் 132 காலி பணியிடங்கள நிரப்ப ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 24.01.2025 அன்று அறிவிக்கை வெளியிடப் பட்டு நிரப்பப்படவுள்ளது.

இதுபோன்ற திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தித் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**உச்சநீதிமன்ற கிளையை சென்னையில் அமைத்திடுக!**

நீதித்துறை உட்கட்டமைப்புக்குத் தேவையான அனைத்து வசதிகளை மேம்படுத்தித் தர தமிழ்நாடு அரசு என்றைக்கும் துணை நிற்கும்.

உச்சநீதிமன்றத்தின் நீதியரசர்கள் வருகை புரிந்துள்ள இந்த நேரத்தில், சென்றமுறை இதே இடத்தில் நான் வைத்த ஒரு முக்கியமான கோரிக்கையை மீண்டும் ஒருமுறை இங்கே நினைவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

உச்சநீதிமன்றத்தின் கிளையை சென்னையில் அமைத்தால், தென்மாநில மக்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் மிகுந்த பயனுடையதாக இருக்கும் என்பதை மீண்டும் இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முன்னோடியான அண்ணல் டாக்டர் அம்பேத்கரின் கூற்றை மேற்கோள் காட்டி, என்னுடைய உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

**இந்த மண்ணின் ஆன்மாவாக விளங்கும் அரசமைப்புச் சட்டம்!**

"அரசமைப்புச் சட்டம் என்பது வழக்கறிஞர்களின் கையில் இருக்கும் ஒரு ஆவணம் தானே எனக் கருதக்கூடாது; அது நமது வாழ்க்கைப் பயணத்தில், நமது வாழ்வின் தரத்தையே மேல்நிலைக்கு கொண்டு செல்லும் ஒரு வாகனமாகும்; அது எப்போதுமே இந்த மண்ணின் ஆன்மாவாக விளங்குகிறது" என்று அண்ணல் அம்பேத்கர் சொன்னார்!

அதுபோல வழக்கறிஞர்கள் செயல்பட வேண்டும்; செயல்பட வேண்டும் என்று கேட்டு, உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# நெய்வேலி இந்திரா நகரில் கலைஞர் நூலகம் திறப்பு விழா!

## அமைச்சர் சி.வெ. கணேசன் - சபா.இராசேந்திரன், எம்.எல்.ஏ.- அப்துல் மாலிக் பங்கேற்பு!

*கடலூர், மார்ச் 17-*

கடலூர் மேற்கு மாவட்டம்,நெய்வேலி சட்டமன்றத் தொகுதி இந்திரா நகர் ஊராட்சி, எம்.ஆர்.கே, சாலையில் , கலைஞர் நூலகம் திறப்பு விழா நடைபெற்றது.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா .இராசேந்திரன் தலைமை தாங்கினார்.

மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் அப்துல் மாலிக் முன்னிலை வகித்தார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ் குமார் வரவேற்றார். கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர்

சி.வெ. கணேசன் கலந்து கொண்டு கலைஞர் நூலகத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நெய்வேலி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தியாக. இளையராஜா, மாவட்ட பொருளாளர் ஜி.தண்டபாணி, பண்ருட்டி முன்னாள் ஒன்றிய குழுத்தலைவர் சபா .பாலமுருகன்,துணை செயலாளர் ஆர்.தணிகை செல்வன் ,ஒன்றிய செயலாளர்கள் அ.குணசேகரன்,தி. வேல்முருகன், ஆர்.சந்தோஷ் குமார், பண்ருட்டி ஒன்றிய அவை தலைவர் ராஜா, துணைச் செயலாளர் செயலாளர் செல்வகுமார் ,

மாவட்ட பிரதிநிதி ஆடலரசன், பொதுக்குழு உறுப்பினர்கள் என் .பலராமன் ,

க.அறிவழகன், ஒன்றிய அவைத் தலைவர் வீர இராமச்சந்திரன்,நகர அவைத்தலைவர் நன்மாற பாண்டியன், ஒன்றிய பொருளாளர் ஆனந்த ஜோதி, துணை செயலாளர்கள் சுமதிநந்தகோபால், ஏழுமலை,நகர கழக செயலாளர்கள்,

ப.மணிவண்ணன், வி.குருநாதன், பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி, கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.ராஜேஷ், செல்வ. துரைராஜ், தங்க.நாராயணசாமி,ஆ.சதாம் ,பாரதிராஜா,

என்.எல்.சி தொ.மு.ச, பொதுச்செயலாளர் என். பாரி, பொருளாளர் ஆர். ஐயப்பன்,அலுவலக செயலாளர் ஆர்.ஜெரால்டு,

பேரூர் செயலாளர் ஜெயமூர்த்தி, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் ராஜேஷ், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆர். ஸ்டாலின், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் பாக்யராஜ், அன்பழகன், அன்பரசன், துணை அமைப்பாளர்கள் ராஜதுரை, கோபு, ஸ்ரீதர், நவீன்,மாவட்ட தொண்டரணி துணை செயலாளர் க.ஸ்டாலின், மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர. சுப்பையா,

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் கொடி பாலு,மாவட்ட இலக்கிய துணை அமைப்பாளர் ஆறுமுகம்,வடக்குத்து முன்னாள் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் ஜே.சடையப்பன்,மற்றும் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள், நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள், என்.எல்.சி தொ.மு.ச நிர்வாகிகள், திமுக சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர் கிழக்கு ஒன்றிய மாணவரணி சார்பில் முதலமைச்சர் முகஸ்டாலின் 72வதுபிறந்த நாளை முன்னிட்டு மாதனூரில் நடைபெற்ற மாரத்தான் போட்டியை மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி,ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர்அ. செ. வில்வநாதன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் ஜி. ராமமூர்த்தி, முரளி, தே.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை ரஞ்சித் செய்திருந்தார்.

# வல்லம் மத்திய ஒன்றியத்தில் பொதுக்கூட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை!

*செஞ்சி, மார்ச் 17-*

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்ற தொகுதி வல்லம் மத்திய ஒன்றிய திமுக சார்பில் திமுக தலைவர் முதலமைச்சரின் மு.க.ஸ்டாலின் 72 வது பிறந்தநாள் விழா மற்றும் திமுக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் பள்ளிக்குளம் கலைஞர் திடலில் நடைபெற்றது. வல்லம் மத்திய ஒன்றிய செயலாளர் இளம்வழுதி தலைமை தாங்கினார் .கிளை செயலாளர் பெருமாள், சுப்ரமணி, ராமதாஸ், சிவபெருமாள்,பி.எஸ். குமார்,சோமாஸ் ,தனசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய துணைச் செயலாளரும், ஒன்றிய குழு உறுப்பினர் ஏழுமலை அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.தலைமை கழக பேச்சாளர் ஆரூர் மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு திமுக அரசின் சாதனைகளை எடுத்துரைத்தனர்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், மாநில தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர்,வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,வல்லம் தெற்கு ஒன்றியசெயலாளர் துரை மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன் அணி நிர்வாகிகள் தமிழரசன், ரோமியன்,செந்தமிழன்,ஒன்றிய நிர்வாகிகள் வெங்கடேசன், பத்மநாபன், கதிரவன், ராமதாஸ், பாண்டியராஜன், லட்சுமி லட்சுமணன்,பழனி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் முருகேசன், மண்ணாங்கட்டி, சௌந்தரராஜன், சந்திரன், கார்வண்ணன், மலையரசன், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கழக முன்னோடிகள் கிளை கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ராஜா நன்றி கூறினார்.





இராணிப்பேட்டையில், ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அமைச்சர் ஆர்.காந்தி பேசினார். தலைமைக் கழகப் பேச்சாளர்கள் துரை சம்பத், ஜாஸ்மின் சுவேதா மற்றும் வினோத் காந்தி, ஜெ.எஸ். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., ஏ.கே.சுந்தரமூர்த்தி உள்ளிட்டோர் உடனுள்ளனர்.